# குளச்சல் நகராட்சி

## 2007–2008–ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை

### 1. அமைப்பும் மேலாண்மையும்

**1. ஆட்சி அமைப்பு (Jurisdiction)**

குளச்சல் நகராட்சி திருவிதாங்கூர் கொச்சி மாகாணத்தில் இருந்த போது 1920–ம் ஆண்டு மூன்றாம் நிலை நகராட்சியாக தோற்றுவிக்கப்பட்டது. அரசாணை நிலை எண்.85 (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகு துறை) நாள் 22.8.1998–ன்படி இரண்டாம் நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டுள்ளது. அன்று முதல் இரண்டாம் நிலை நகராட்சியாக தொடர்ந்து இருந்து வருகிறது.

குளச்சல் நகராட்சியின் பரப்பளவு 5.18 சதுர கி.மீ. 2001–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியின் மக்கள் தொகை 23787 ஆகும். இதில் ஆண்கள் 11996, பெண்கள் 11791. மொத்த மக்கள் தொகையில் எஸ்.சி./எஸ்.டி. வகுப்பினர் எண்ணிக்கை 602 (ஆண்கள் 293, பெண்கள் 309)

**2. பணி அமைப்பு (Personal )**

**அ. மன்றம்**

இந்நகராட்சியில் உள்ள மொத்த வார்டுகளின் எண்ணிக்கை 24 ஆகும். இதில் பெண்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள 8 வார்டுகளில் 1 வார்டு எஸ்.சி. பெண்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. 16 வார்டுகள் பொதுவானவையாகும்.

| | | |
|---|---|---|
| பொது | – | வார்டு எண். 3, 4, 5, 7, 8, 9, 10, 11, 12, 14, 15, 17, 18, 20, 21, 22 |
| பெண்கள் (பொது ) | – | வார்டு எண். 1, 2, 6, 13, 16, 19, 24 |
| பெண்கள் (S.C.) | – | வார்டு எண். 23 |

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்றம் செயல்பட்டு வருகின்றது. திரு.ஜே.ஜேசையா அவர்கள் நகர்மன்றத் தலைவராகவும், திருமதி.ஏ.ற்றி.லதா அவர்கள் நகர்மன்ற துணைத் தலைவராகவும் உள்ளனர். மொத்தம் 24 உறுப்பினர்கள் உள்ளனர்.

| வார்டு எண். | நகர்மன்ற உறுப்பினர் பெயர் |
|---|---|
| 15 | திரு. ஜேசையா .ஜே. நகர்மன்றத் தலைவர் |
| 2 | திருமதி. லதா .எ.ற்றி. நகர்மன்ற துணைத்தலைவர் |
| **நகர்மன்ற உறுப்பினர்கள்** | |
| 1 | திருமதி. மேரி அல்போன்சாள்.எம். |
| 3 | திரு. சுரேஷ் .மு. |
| 4 | திரு. நசீர் .அ. |
| 5 | திரு. மரிய ஜாண் .எ. |
| 6 | திருமதி. செலஸ்டீனம்மாள் .எ. |
| 7 | திரு. லியோன்ஸ் .எல். |
| 8 | திரு. பின்டோ .பி. |
| 9 | திரு. பிரான்சிஸ் அமலதாஸ் .ஜே. |

| | |
|---|---|
| 10 | திரு. ராஜன் .அ. |
| 11 | திரு. ஜாண்லோப்பஸ் .க. |
| 12 | திரு. ஏசுதாசன் .எஸ். |
| 13 | திருமதி. ஜாண்சி .ற்றி. |
| 14 | திரு. சூசைமரியான் .எஸ். |
| 16 | திருமதி. லூர்து மேரி .வி. |
| 17 | திரு. முருகன் .சி. |
| 18 | திரு. நசீம் .எம். |
| 19 | திருமதி. கோமளா .வி. |
| 20 | திரு. அப்துல் முனாப் .ற்றி. |
| 21 | திரு. நூறு முகம்மது .எம். |
| 22 | திரு. கலீல் ரஹமான் .எம்.எ.ஆர். |
| 23 | திருமதி. சீதை .எஸ். |
| 24 | திருமதி. ஷீலா ஜெயந்தி .எஸ். |

**நிர்வகிக்கும் அலுவலர்**
**ஆணையாளர்**

அறிக்கைக்குட்பட்ட காலத்தில் 01.04.2007 முதல் 30.04.2007 வரை திரு.ச.ரவி அவர்களும், 02.05.2007 முதல் 31.03.2008 முடிய திரு.லோகநாதன், ஆணையர் அவர்கள் பணியாற்றியுள்ளனர்.

## 3. தேர்தல்

அறிக்கைக்குட்பட்ட காலத்தில் தேர்தல் நடைபெறவில்லை.

## 4. நகர்மன்றக் கூட்டங்கள்

அறிக்கையாண்டில் நகர்மன்றக்கூட்டங்கள் முறையாகவும், சீராகவும் நடைபெற்றுள்ளது. அறிக்கையாண்டில் நடைபெற்றுள்ள கூட்டங்கள் மற்றும் முடிவு செய்யப்பட்டுள்ள பொருள்கள் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| கூட்டத்தின் தன்மை | நடைபெற்ற கூட்டங்களின் எண்ணிக்கை | முடிவு செய்யப்பட்ட பொருள்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| சாதாரணக்கூட்டம் | 9 | 247 |
| அவசரக்கூட்டம் | 11 | 87 |
| சிறப்புக்கூட்டம் | – | – |

## 5. குழுக்கள்

வரிமேல் முறையீட்டுக்குழு, நியமனக்குழு மற்றும் ஒப்பந்தக்குழுக்களால் கீழ்கண்ட விவரப்படி பொருள்கள் முடிவு செய்யப்பட்டுள்ளன.

| குழுவின் பெயர் | நடைபெற்ற கூட்டங்களின் எண்ணிக்கை | முடிவு செய்யப்பட்ட பொருள்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| வரிமேல்முறையீட்டுக்குழு | 3 | 435 |
| நியமனக்குழு | 3 | 3 |
| ஒப்பந்தக்குழு | – | – |

திரு.பிரான்சிஸ் அமலதாஸ் அவர்கள் நியமனக்குழு உறுப்பினராகவும், திரு.மரிய ஜாண் அவர்கள் ஒப்பந்தக்குழு உறுப்பினராகவும் இருந்தனர். திரு.ஜாண் லோப்பஸ், திருமதி ஜான்சி, திருமதி. சீதை, திருமதி. ஷீலா ஜெயந்தி ஆகியோர்கள் வரி மேல்முறையீட்டுக்குழு உறுப்பினர்களாகவும் இருந்து வருகிறார்கள்.

## 6. நிர்வாகம் (பொதுப்பிரிவு)

அறிக்கையாண்டில் மேலாளர் பணியிடம் 24.04.2006 முதல் காலியாக உள்ளது. பொதுப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ள பணியிடங்கள் விவரம் கீழ்வருமாறு :

| | |
|---|---|
| மேலாளர் | 1 |
| இளநிலை உதவியாளர் | 3 |
| தட்டச்சர் | 1 |
| அலுவலக உதவியாளர் | 1 |
| உதவி திட்ட அமைப்பாளர் | 1 |
| அறிக்கையாண்டில் செலவினம் | – ரூ. 6,65,280/– |
| வருவாய் உதவியாளர்கள் | – 3 |

அறிக்கையாண்டில் பணியாளர்களின் ஊதியமாக ரூ. 3,07,284/–செலவிடப்பட்டுள்ளது.

### ஆ. பொறியியல் பிரிவு

### பணியாளர்கள் விவரம்

இந்நகராட்சியின் பொறியியல் பிரிவில் கீழ்க்கண்ட பணியாளர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(1) நகராட்சி பொறியாளர் நிலை–III

(2) பொது;ப்பணி மேற்பார்வையாளர்

(3) மின்பணியாளர் நிலை –II

அறிக்கையாண்டில் மின்பணியாளர் பணியிடம் காலியாக உள்ளது.
அறிக்கை ஆண்டில் பணியாளர்கள் உத்தேச செலவினம் ரூ. 3,42,816/–ஆகும்.

**சாலைகள், பாலங்கள் மற்றும் தோணி துறைகள்**

இந்நகராட்சிப் பகுதிக்குள் தேசிய நெடுஞ்சாலை எதுவும் இல்லை. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட சாலைகளின் மொத்த நீளம் **26.94** கி.மீ. இந்நகராட்சி எல்லைக்குள் நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணித் துறையினரால் பராமரிக்கப்படும் சாலைகளின் மொத்த நீளம் **17.582** கி.மீ. சாலை பராமரிப்புக்கென தனியாக பணியாளர் யாரும் இல்லை. பொது சுகாதாரப் பணியாளர்களைக் கொண்டு பராமரிப்புப் பணி நடைபெற்று வருகின்றன.

| வ.எண். | சாலையின் விவரம் | 31.3.2008–ன்படி |
|---|---|---|
| 1. | சிமென்ட் சாலை | 8.22 கி.மீ. |
| 2. | கருந்தள சாலை | 16.15 கி.மீ. |
| 3. | ஜல்லி சாலை | 0.24 கி.மீ |
| 4. | மண் சாலை | 2.33 கி.மீ. |
| | மொத்தம் | 26.94 கி.மீ. |

**(இ) தெருவிளக்கு**

தெருவிளக்கு பராமரிப்பில் கீழ்கண்ட பணியாளர்கள் தொடர்ந்து பணிபுரிந்து வருகின்றனர்.

1. மின் கம்பியாளர் 1
2. மின்கம்பி உதவியாளர் 1

இத்தலைப்பின்கீழ் அறிக்கை ஆண்டில் பணியாளர் செலவினம் ரூ.3,07,092/– மின்விளக்கு உபகரணங்கள் வாங்க ரூ.81,112/– செலவு செய்யப்பட்டுள்ளது. மின்கட்டணமாக ரூ.28,39,106/– தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது. அறிக்கையாண்டின் இறுதியில் கீழ்கண்டவாறு தெருவிளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

| வ. எண் | விளக்குகள் விவரம் | 1.4.2007–ல் உள்ளபடி | நீக்கம் | சேர்க்கை | 31.3.2008–ல் உள்ளபடி |
|---|---|---|---|---|---|
| 1 | பாதரச விளக்கு | – | – | – | – |
| 2 | சோடியம் ஆவிவிளக்கு | 64 | – | 25 | 89 |
| 3 | 40 வால்ட் குழல் விளக்கு | 1262 | – | – | 1262 |
| | மற்றவை | – | – | 3 | – |

அ) இந்நகராட்சிப் பகுதியில் பெரிய பாலஙகள் எதுவுமில்லை.

ஆ) அறிக்கை ஆண்டில் பெரிய பாலஙகள் எதுவும் கட்டப்படவில்லை

இ) இந்நகராட்சியில் பெரிஸ் ( **Ferries**) எதுவும் கட்டப்படவில்லை

உ) தஙகும் விடுதிகள், சத்திரஙகள் மற்றும் தண்ணீர் பந்தல்கள்

இந்நகராட்சியில் மேற்காணும் யாவும் பராமரிக்கப்படவில்லை. பொதுப்பணித் துறையினரால் பயணிகள் விடுதி மட்டும் பராமரிக்கப்பட்டு வருகின்றது

**10. தளவாடச் சாமான்கள்**

அறிக்கை ஆண்டில் இந்நகராட்சியில் தளவாடச் சாமான்கள் வாஙகுவதற்காக செலவுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

## 11. தெருவிளக்குகள்

இந்நகராட்சி பகுதியிலுள்ள தெருவிளக்குகள் அனைத்தும் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

## III. கல்வி

## 12. கல்வி வரி

நகராட்சி எல்கைக்குள் தனியாரால் 7 பள்ளிகளும், அரசினரால் 6 பள்ளிகளும் பராமரிக்கப்பட்டு வருகின்றன.
இந்நகராட்சியின் பராமரிப்பில் பள்ளிக் கட்டிடம் எதுவும் இல்லை.

13. மாணவர்கள் எண்ணிக்கையும் திறமையும் – கேள்வி எழவில்லை

14. பயிற்றுவிக்கும் பணியாளர்கள் – கேள்வி எழவில்லை

15. இடவசதியும் சாதனஙகளும் – கேள்வி எழவில்லை

16. (1) ஆரம்ப பள்ளி – கேள்வி எழவில்லை

(2) இடைநிலைக் கல்வி – கேள்வி எழவில்லை

## 17. பள்ளிகளின் எண்ணிக்கையும் வசதிகளும்

இந்நகராட்சியின் பராமரிப்பில் மேல்நிலைப் பள்ளிகளோ, உயர்நிலைப் பள்ளிகளோ எதுவும் இல்லை. தனியாரால் 2 மேல்நிலைப் பள்ளிகளும், அரசால் 1 உயர் நிலைப் பள்ளியும் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

18. கல்வித் திறமை கேள்வி எழவில்லை

19. பணியாளர்கள் கேள்வி எழவில்லை

20. இடவசதிகள் கேள்வி எழவில்லை

21. நிதி ஆதாரம் கேள்வி எழவில்லை

## 22. சிறப்புப் பள்ளிகள்

நகராட்சியால் சிறப்புப் பள்ளி அல்லது வாசக சாலை எதுவும் பராமரிக்கப்படவில்லை மாவட்ட நூலக ஆணைக் குழுவினரால் ஒரு பொது நூலகம் மட்டும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. தனியாரால் தனிப் பயிற்சி கல்லூரிகளும் (**Tutorial College**) குழந்தைகளுக்கு ஒரு கான்வென்ட் பள்ளியும் ஒரு அராபிக் கல்லூரியும் நடத்தப்பட்டு வருகின்றன.

### வானொலிப்பெட்டி மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகள்

வானொலிப் பெட்டி எதுவும் பராமரிக்கப்படவில்லை. ஆனால் ஒரு தொலைக்காட்சிப் பெட்டி மட்டும் நகராட்சிக்கு சொந்தமாக உள்ளது.

## புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்

இந்நகராட்சியில் கீழ்கண்ட 11 இடங்களில் குழந்தைகள் நல மையங்கள் இயங்கி வருகின்றன.

1) சாஸ்தாங்கரை
2) செக்காலத்தெரு
3) அஞ்சாலிவிளை
4) களிமார்
5) கொட்டில்பாடு–1
6) கொட்டில்பாடு–2
7) மரமடி–1
8) மரமடி–2
9) துறைமுகத்தெரு–1
10) துறைமுகத்தெரு–2
11) துறைமுகத்தெரு–3

அறிக்கையாண்டில் 11 குழந்தைகள் நல மையங்கள் நகராட்சி சொந்த கட்டிடங்களில் இயங்கி வருகின்றன.

## 14) பள்ளி சத்துணவு மையங்கள்

பள்ளி சத்துணவு மையங்கள் எதுவும் நகராட்சி கட்டுப்பாட்டில் இல்லை.

## 1. பொது சுகாதாரம்

### i) மருத்துவ நிவாரணம்

இந்நகராட்சியில் மருத்துவமனைகள் அல்லது மருந்தகங்கள் எதுவும் நகராட்சியால் பராமரிக்கப்படவில்லை. ஒரு அரசு மருத்துவமனையும் 10 தனியார் மருத்துவமனைகளும் நகரில் செயல்பட்டு வருகின்றன.

### ii) அமைப்பும் பணியாளர்களும்

இந்நகராட்சியில் நகர்நல அலுவலர் பணியிடம் இல்லை.

**iii) சிறப்புத்திட்டம்** – எதுவுமில்லை.

(1) மருத்துவப் பயிற்சிக்கு உதவித் தொகை வழங்கல் – எதுவுமில்லை.

24) நோயாளிகள் – கேள்வி எழவில்லை

25) வசதிகள் – கேள்வி எழவில்லை

6) <u>பொதுசுகாதாரப் பணியாளர்கள் விவரம்</u>

பொது சுகாதாரப் பிரிவில் கீழ்கண்ட பணியிடஙகள் அரசினால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1) துப்புரவு அலுவலர் | – | அறிக்கையாண்டில் துப்புரவு அலுவலர் பணியிடம் காலியாக உள்ளது. |
| 2) துப்புரவு ஆய்வாளர் | – | – |
| 3) துப்புரவு மேற்பார்வையாளர் | – | 4 |
| 4) துப்புரவு பணியாளர்கள் | – | 50 |
| 5) மகப்பேறு உதிவியாளர் | – | – |
| 6) மகப்பேறு ஆயா | – | 1 |

அறிக்ரகயாண்டில் பொது சுகாதாரப் பிரிவில் பணியாளர்கள் ஊதியம் மற்றும் இதர செலவினம் ரூ. 4.30 லட்சம் ஆகும்.

27) <u>மகப்பேறு நிவாரணம்</u>

இந்நகராட்சியின் பராமரிப்பில் ஒரு தாய்சேய் நல விடுதி உள்ளது. அறிக்கை ஆண்டில் மகப்பேறு உதவியாளர் பணியிடம் காலியாக உள்ளது. ஒரு மகப்பேறு ஆயா மட்டுமே பணிபுரிந்து வருகிறார்.

28) <u>இறப்பு விகிதம் 2007–2008</u>

| | | |
|---|---|---|
| இறப்புகளின் எண்ணிக்கை | – | 142 |
| பிறப்புகளின் எண்ணிக்கை | – | 1062 |
| இறந்து பிறந்தவை | – | 8 |
| சிசு மரணம் | – | – |
| பேறுகால இறப்பு | – | இல்லை |

**<u>2007–08–ல் தடுப்பு மருந்து போட்ட விவரம்</u>**

| **மருந்து** | | **தடுப்பு மருந்து போட்ட குழந்தைகள்** |
|---|---|---|
| **T.T.** | - | -- |
| **D.P.T.** | - | 749 |
| **Polio** | - | 2340 |
| **B.C.G.** | – | 1493 |

இத்தலைப்பில் பணியாளர் செலவினம் ரூ. 86,328/– ஆகும்.

**29. <u>சுகாதாரம்</u>**

துப்புரவுப் பணிக்கு 4 மினி லாரிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

**<u>அ) நகர் சுகாதாரம்</u>**

இந்நகரில் மொத்தம் 6115 கட்டிடஙகள் உள்ளன. அனைத்து வீடுகளில் கழிப்பிட வசதி உள்ளன. குறைந்த செலவில் கழிப்பிடம் கட்டும் திட்டத்தின்கீழ் 80 வீடுகளுக்கு கழிப்பிடம் கட்டி கொடுக்கப்பட்டுள்ளது. இந்நகராட்சிக்கு என உரக்கிடஙகு இல்லாத காரணத்தால் நகரில் சேரும் குப்பைகளை ஊருக்கு வெளியே கொட்டப்பட்டு வருகிறது.

**ஆ) உணவு கலப்பட தடுப்புச் சட்டம்**

அறிக்கையாண்டில் பயிற்சி பெற்ற துப்புரவு ஆய்வாளர் இந்நகராட்சியில் பணிபுரியாததால் உணவு மாதிரிகள் எதுவும் எடுக்கப்படவில்லை.

இ) அபாயகரமானதும் அருவருக்கத்தக்கதுமான உரிமத்தின்கீழ் பெறப்பட்ட வருமானம் – ரூ.

ஈ) நகராட்சிப் பகுதியில் அரசினால் பிரகடனப்படுத்தப்பட்ட விழாக்கள் எதுவுமில்லை.

**பாதுகாக்கப்பட்ட குடிநீர் வினியோகம்**

இந்நகராட்சிப் பகுதியில் வெள்ளிப்பிள்ளையார் கோவில் தெரு பகுதியில் அமைந்துள்ள 11 ஆழ்குழாய் கிணறுகளிலிருந்து கீழ்கண்ட இடஙகளில் அமைந்துள்ள மேல்நிலைத் தொட்டிகளுக்கு மின்சார மோட்டார் மூலம் தண்ணீர் ஏற்றப்பட்டு கிருமி நாசினி கலந்து நகரில் எல்லா பகுதிகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வருகின்றது. 11 ஆழ்குழாய் கிணறுகளில் 10 ஆழ்குழாய் கிணறுகளில் 10 H,P. மோட்டார்களும், 1 ஆழ்துளைக் கிணறில் 5 H,P. மோட்டாரும் பொருத்தப்பட்டுள்ளன.

**மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் விவரம்**

| வ.எண். | அமைந்துள்ள இடம் | கொள்ளளவு |
|---|---|---|
| 1 | பேருந்து நிலையம் | 2 லட்சம் |
| 2 | துறைமுகத்தெரு | 1 லட்சம் |
| 3 | பொட்டல் பகுதி | 2 லட்சம் |
| 4 | நகராட்சி அலுவலகம் | 7 லட்சம் |
| 5 | துறைமுகத்தெரு | 1 லட்சம் |
| 6 | பர்னட்டிவிளை | 0.60 லட்சம் |
| 7 | கொட்டில்பாடு | 0.30 லட்சம் |
| 8 | கே.எஸ்.எஸ்.எஸ்.காலனி | 0.60 லட்சம் |
| 9 | சிஙகாரவேலன் காலனி | 0.30 லட்சம் |

இந்நகராட்சியில் 141 பொதுக்குழாய்கள் உள்ளன. 3298 தனியார் வீட்டு குடிநீர் குழாய்கள் நகராட்சி மூலம் வழஙகப்பட்டு பாதுகாக்கப்பட்ட குடிநீர் தினந்தோறும் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

**குடிநீர் கட்டணம்**

அறிக்கை ஆண்டில் குடிநீர் கணக்கு தலைப்பின்கீழ் வரவு ரூ. 35.06 லட்சம் செலவு ரூ. 14.81 லட்சம்.

**31) கழிவுநீர் வடிகால்**

இந்நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் எதுவும் இல்லை. மழைநீர் வடிகால் மூலம் கழிவுநீர் நகரின் மேற்கே பாம்பூரி வாய்க்காலில் கடலில் சேருமிடத்தில் கலக்கிறது. நகரில் உள்ள மழைநீர் வடிகால் நீளம் 18.62.கி. மீ.

**32) பொது நலமும் பாதுகாப்பும்**

அறிக்கையாண்டில் நாய்கள், பன்றிகள் எதுவும் அழிக்கப்படவில்லை,

**33) பொது** – இல்லை

**34) போக்குவரத்து** – இல்லை

(அ) தினசரிச் சந்தை, மீன் சந்தை, வதை சாலை, பேரூந்து நிலையம் மற்றும் கட்டண கழிப்பிடம் போன்றவைகள் மூலம் கிடைத்த வருமான விவரம் பின்வருமாறு

| <u>**தினசரிச்சந்தை**</u> | <u>**மீன்சந்தை**</u> | <u>**வதைசாலை**</u> | <u>**பேரூந்து நிலையம்**</u> | <u>**கட்டண கழிப்பிடம்**</u> |
|---|---|---|---|---|
| 5,00,000 | 77,500 | – | 1,60,050 | 69,850 |

(ஆ) தினசரிச் சந்தை ஒன்றும், மீன்சந்தை ஒன்றும் பேணப்பட்டு பொது ஏலத்தில் குத்தகைக்கு விடப்பட்டு வருகின்றன.

(இ) வண்டிப்பேட்டை – இல்லை

**(எ) பேரூந்து நிலையம்**

சி – பிரிவு பேருந்து நிலையம் ஒன்று பராமரிக்கப்பட்டு வருகின்றது. பேருந்து நிலையம் மூலம் அறிக்கையாண்டில் நகராட்சிக்கு ரூ. 1,60,050/– வருமானம் கிடைத்துள்ளது.

**(உ) வதை சாலை**

நகராட்சிக்கு சொந்தமான வதை சாலை இல்லை.

**(ஊ) <u>தொழில் கூடங்கள்</u>**

மாஸ்டர் பிளான் இன்னும் அங்கீகரிக்கப்படவில்லை. 1939–ம் வருட தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டம் 1.7. 1966 முதல் இந்நகராட்சியில் அமுலில் உள்ளது.

**36) <u>மரம் நடுதல் மற்றும் பூஙகா பராமரிப்பு</u>**

அறிக்கையாண்டில் மரஙகள் எதுவும் நடப்படவில்லை.
நகராட்சிக்கு சொந்தமான பூங;கா எதுவுமில்லை.

**37) <u>நில வளர்ச்சி</u>**

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், திருநெல்வேலி அவர்களால் பரிந்துரைக்கப்பட்ட விரிவு அபிவிருத்தித்திட்டம்–I, II மற்றும் III ஆகியவை விளம்பரப்படுத்தப்பட உள்ளது.

**(அ) <u>நகரமைப்பு திட்டஙகள்</u>**

நகரமைப்புத் திட்டஙகள் எதுவுமில்லை.

**(இ) <u>சாலை ஓரக்கடைகள்</u>** – இல்லை

**(ஈ) வரை கடப்புகள்** – அறிக்கையாண்டின் தொடக்கத்தில் 925 வரை கடப்புகள் காணப்பட்டன.

**(உ) இதர வருவாய் வரத்தக்க இனஙகள் –** இதர இனஙகள் எதுவுமில்லை.

## பொது வருமானம்

### 39) வருவாய் இனம்

இந்நகராட்சியில் கீழ்கண்டவாறு சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது,

| விவரம் | வரி |
|---|---|
| 1) பொது வரியினஙகள் | 8% |
| 2) விளக்கு வரி | 8% |
| 3) தண்ணீர் வரி | 8% |

### 40) கட்டிடஙகளுக்கு வரிவிதிப்பு

அறிக்கையாண்டில் 351 கட்டிடஙகளுக்கு புதிய வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. புதிய வரிவிதிப்புகள் மூலம் நகராட்சி வருமானம் ரூ. 3,84,694/–

### 41) கேட்பு வசூல் நிலுவை

அறிக்கையாண்டில் வரியினம் மற்றும் வரியற்ற இனத்தின்கீழ் கேட்பு வசூல் நிலுவை விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| இனம் | கேட்பு | வசூல் | நிலுவை (ரூ.இலட்சத்தில்) | வசூல் விழுக்காடு |
|---|---|---|---|---|
| வரியினம் | 40.58 | 23.62 | 16.96 | 58 % |
| வரியற்றயினம் | 17.89 | 12.55 | 5.34 | 70 % |

நூலகவரி சொத்துவரியில் 10 % என்ற கணக்கில் வசூலிக்கப்பட்டு வருகின்றது. தொழில் வரி புதிய அரசாணைப்படியும், இந்நகர்மன்ற தீர்மானம் எண்.651 நாள் 23.08.2008–ன்படியும் கீழ்க்கண்ட விபரப்படி தொழில்வரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| ரூ. 21,000/– வரை | இல்லை |
| ரூ. 21,001 முதல் ரூ. 30,000 வரை | ரூ. 94/– |
| ரூ.31,001 முதல் ரூ. 45,000 வரை | ரூ. 235/– |
| ரூ.45,001 முதல் ரூ. 60,000 வரை | ரூ. 469/– |
| ரூ.60,001 முதல் ரூ. 75,000 வரை | ரூ. 704/– |
| ரூ.75,001 முதல் அதற்கு மேல் | ரூ. 938/– |

**பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம் (SJSRY)**

இந்நகராட்சியில் பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம் 01.10.1998 முதல் நடைமுறையில் இருந்து வருகிறது. இதற்கான நிதி ஆதாரம் மத்திய அரசினரால் 75 சதவீதமும், மாநில அரசினரால் 25 சதவீதமும் வழஙகப்பட்டு வருகிறது.
2007–08–ம் ஆண்டிற்கான ஒதுக்கப்பட்ட தொகை மற்றும் பயன்பெற்றவர்கள் விபரம்

**2007–08**

இத்திட்டத்தின்கீழ் பல்வேறு அலகுகளுக்காக ஒதுக்கப்பட்ட மொத்த தொகை ரூ. 426839/–

**நகர்ப்புற சுயஉதவித் திட்டம் (USEP) :**

தனிநபர் கடன்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 32,890/– தனிபர்கள் 16 பயனாளிகள். இம்மானியத் தொகையுடன் கூடிய கடன் தொகையில் ஸ்டேட் பாஙக் ஆப் திருவிதாஙகூர் மற்றும் தமிழ்நாடு மெர்க்கண்டைல் வஙகி மூலமாக பயனடைந்துள்ளனர்.

**நகர்புற பெண்கள் மற்று. குழந்தைகள் மேம்பாட்டு சஙகம் (DWCUA) :**

ஒதுக்கப்பட்ட மானியத் தொகை ரூ.98,669/– இதனை 3 குழுக்களுக்கு ஸ்டேட் பாஙக் ஆப் திருவிதாஙகூர் மற்றும் தமிழ்நாடு மெர்க்கண்டைல் வஙகி மூலமாக கடன் வழஙகப்பட்டது.

**சிக்கன மற்றும் நாணய சஙகம் (Thrift Credit Society) :**

ஒதுக்கப்பட்ட தொகை ரூ.72680/– இதனை இந்நகராட்சியின்கீழ் இயஙகிவரும் குழுக்களுக்கு சுழல் நிதியாக வழஙகப்பட்டது

**பயிற்சி (Training) :**

ஒதுக்கப்பட்ட தொகை ரூ.35,880/– இந்நிதியான இந்நகராட்சிக்குட்பட்ட வறுமைக் கோட்டிற்கு கீழ்வாழும் பயனாளிகளுக்கு (Skill training) திறன்பயிற்சி வழஙகப்பட்டது.

**நகர்ப்புற கூலி வேலை வாய்ப்பு திட்டம் (UWEP) :**

ஒதுக்கப்பட்ட நிதி தொகையான ரூ. 1,03,960/– இதனை இந்நகராட்சிக்குட்பட்ட உய்யாண்டிவிளை (வார்டு எண் 16) மழைநீர் வடிகால் ஓடையுடன்கூடிய சிமெண்ட் தளம் அமைக்கப்பட்டது.

**சமுதாய உள்கட்டமைப்பு (Community Structure) :**

ஒதுக்கப்பட்ட தொகையான ரூ. 48,760/– இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியிலுள்ள குழுக்களுக்கான பயிற்சிக்கு வழஙகப்பட்டது.

**அலுவலக மற்றும் இதர செலவினஙகள் (A&OE) :**

ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 21,000/– அலுவலக உபகரணஙகளுக்காக உபயோகப்படுத்தப்பட்டது.

**உள்ளாட்சி அமைப்பினை வலுப்படுத்துதல் (For Strengthening of Urban Local Bodies) :**

ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 13,000/– நகராட்சியின் பல்வேறு பணிகளுக்காக செலவிடப்பட்டது.

**42) பொதுப்பணிகள்**

இந்நகராட்சியின் பொது நிதி உட்பட பல்வேறு தலைப்புகளின்கீழ் நடைபெற்ற பணிகள் விவரம்
2007–2008–ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணிகள்

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. |
|---|---|---|
| **I** | **சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2007–08** | |
| 1 | பள்ளிவாசல் அருகில் சுற்றுசுவர் அமைத்தல் | 3.00.000 |
| 2 | துறைமுகத்தெரு சர்ச் பக்கம் நூலகம் கட்டுதல். | 3.00.000 |
| 3 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட நெசவாளர் தெருவில்; மினிபவர் பம்ப் அமைத்தல். | 1.00.000 |
| **II** | **பாராளுன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2007–08** | |
| 4 | வார்டு எண்.8 மரமடித்தெருவில் ஓய்வறை கட்டுதல். | 2.00.000 |
| 5 | முகைதீன்பள்ளி அருகிலுள்ள மயானத்தை சுற்றி சுற்றுசுவர் கட்டுதல் | 2,00,000 |
| 6 | குளச்சல் நகரரட்சிக்குட்பட்ட துறைமுகத் தெருவில் ஓய்வறை கட்டுதல் | 2,50,000 |
| **III** | **12–வது நிதிக்குழுத் திட்டம் 2007–08** | |
| 7 | இந்திராகாலனியில் (வெர்மி கம்போஸ்ட் யாட் ) சுற்றுசுவர் கட்டுதல். | 6,10,000 |
| 8 | பள்ளி ரோடு அருகில் அமைந்துள்ள கல்வெர்ட் பழுது பார்த்தல்.. | 1.20.000 |
| 9 | பள்ளிரோடு தெற்கு பகுதியிலிருந்து வில்லேஜ் ஆபீஸ் முதல் பீச் வரை கருந்தளம் அமைத்தல். | 6,32,000 |
| 10 | நரிக்கல் சந்திப்பிலுள்ள சிறுபாலம் மற்றும் சன்னதி தெருவிலுள்ள கழிவுநீர் வடிகால் ஓடை பழுது பார்த்தல். | 1.15.000 |
| 11 | கலவை உரக்கிடங்கில் குவிந்துள்ள குப்பைகளை அகற்றுதல். | 1.25.000 |
| 12 | இலப்பவிளை குறுக்குத்தெருவில் சிமின்ட் காங்கிரீட் தளம் மற்றும் கழிவுநீர் வடிகால் ஓடை அமைத்தல். | 2,50,000 |
| **IV** | **வெள்ள நிவாரண நிதி 2007–08** | |
| 13 | வெள்ளிப்பிள்ளையார் கோவில் தெருவில் வெள்ளநிவாரண தடுப்பு சுவர் கட்டுதல். | 1.00.000 |
| **V** | **இயக்குதல் மற்றும் பராமரித்தல் – வெற்றிடங்கள் நிரப்புதல் பணி 2007–08.** | |
| 14 | மதனாவிளை மற்றும் பண்டாரவிளையில் சிமின்ட் காங்கிரீட் தளம் மற்றும் கழிவுநீர் வடிகால் ஓடை அமைத்தல். | 6.30.000 |
| 15 | பள்ளிவிளாகம் குறுக்குத் தெருவில் சிமின்ட் காங்கிரீட் தளம் மற்றும் கழிவுநீர் வடிகால் ஓடை அமைத்தல். | 3.30.000 |
| 16 | காமராஜர் குறுக்குத்தெரு மற்றும் புல்லன்விளை குறுக்குத் தெருவில் சிமின்ட் காங்கிரீட் தளம் அமைத்தல். | 2.75.000 |
| 17 | ஆசாத்நகர் குறுக்குத் தெருவில் கதவு எண்.4/96–1 அருகில் சிமின்ட் காங்கிரீட் தளம் மற்றும் கழிவுநீர் வடிகால் ஓடை அமைத்தல். | 1.40.000 |
| 18 | மேலத்தெரு குறுக்குத் தெருவில் காங்கிரீட் தளம் மற்றும் கழிவுநீர் வடிகால் ஓடை அமைத்தல். | 2.40.000 |
| 19 | சிஙகன்காவு ரோடு திறந்தவெளி கிணறு அருகில் காங்கிரீட் தளம் மற்றும் கழிவுநீர் வடிகால் ஓடை அமைத்தல். | 5.25.000 |
| 20 | சாஸ்தான்கரை கி குறுக்குத் தெருவில் ழக்கு பக்கம் (பண்டாரவிளை அருகில்) காங்கிரீட் தளம் மற்றும் கழிவுநீர் வடிகால் ஓடை அமைத்தல். | 4.00.000 |

| VI. | பொது நிதி | |
|---|---|---|
| 1 | துறைமுகத்தெரு –1, 2–ல் பொதுக்கழிப்பிடம் பழுது பார்த்தல் | 25,000 |
| 2 | குடிநீர் விநியோக குழாய்களில் ஏற்பட்ட பழுதுகளை சரி செய்தல். | 61,000 |
| 3 | சீம்பிளிவிளை முதல் அலுவலக மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிவரை 6” dia பிவிசி குழாய் அமைத்தல். | 6,50,000 |
| 4 | பேருந்து நிலையத்தில் உள்ள வணிக வளாகத்தில் அமைந்துள்ள கழிப்பறையை கடையாக மாற்றுதல். | 75,000 |
| 5 | பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள வணிக வளாகத்தில் 5 கடைகளில் மின்சார வசதி செய்தல். | 45,000 |
| 6 | சீம்பிளிவிளையில் அமைந்துள்ள ஆழ்குழாய் கிணற்றில் சப்மெர்சிபுள் மோட்டார் அமைத்தல். | 65,000 |
| 7 | பள்ளிரோடு முதல் மரமடி ஜஙசன் வரை குடிநீர் விநியோகக் குழாயில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்தல் | 17,500 |
| 8 | அலுவலக வளாகத்திலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு வர்ணம் பூசுதல். | 45,000 |
| 9 | குடீநீர் விநியோகம் சம்மந்தமான மோட்டார் மற்றும் இதர பொருட்கள் வாஙகுதல். | 2,40,000 |
| 10 | கொட்டில்பாட்டில் அமைந்துள்ள கழிப்பிட எண்.17, 18,19 மற்றும் 20–ன் பழுதுகளை சரி செய்தல். | 1,30,000 |
| 11 | சீம்பிளிவிளையில் சப்மெர்சிபுள் மோட்டார் அமைத்தல் | 65,000 |
| 12 | வணிக வளாகத்தில் அமைந்துள்ள 5 கடைகளில் மின்சார வசதி செய்தல். | 45,000 |
| 13 | காமராஜர் பேருந்து நிலையத்தில் 3 in 1 power coated steel chair அமைத்தல். | 50,000 |
| 14 | கலைஞர் கருணாநிதி வணிக வளாகத்தில் அமைந்துள்ள மின்வாரிய அலுவலகத்தை மாற்றி சீரமைத்தல். | 1,85,000 |
| 15 | கோயில்விளையில் அமைந்துள்ள பம்பு ரூம் –1 மற்றும் பம்பு ரூம்–2–ன் Panel Board ஐ மாற்றி அமைத்தல். | 40,000 |
| 16 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட தண்ணீர் விநியோக மோட்டார் பழுது பார்த்தல். | 44,200 |
| 17 | காமராஜர் பேருந்து நிலையத்தில் கிரானைட் டைல்ஸ் அமைத்தல். | 2,50,000 |
| 18 | குடிநீர் விநியோகத்திற்கு தேவையான மோட்டார் வாஙகுதல் | 2,40,000 |
| 19 | மரமடி ஜஙசனிலிருந்து குளச்சல் நகராட்சி வரை புதிய பைப் லைன் அமைத்தல். | 22,000 |
| 20 | தண்ணீர் வெளியேற்றும் குழாயில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்தல். | 69,000 |
| 21 | குளச்சல் நகராட்சியில் அமைந்தள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் லெவல் கேஜ் அமைத்தல். | 52,000 |
| 22 | குடிநீர் விநியோகக் குழாயில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்தல். | 66,000 |
| 23 | சுனாமி குடியிருப்புக்கு அளவு கல் விநியோகம் செய்தல். | 2,000 |
| 24 | டாக்டர் அம்பேத்கார் தினசரி சந்தையில் மீன் சந்தை செட் அமைத்தல். | 1,00,000 |
| 25 | சப்மெர்சிபுள் மோட்டாரில் ஏற்பட்ட பழுதினை சரி செய்தல் | 40,000 |
| 26 | வணிக வளாக மார்கெட் முன்பகுதியில் சோடியம் ஆவி விளக்கு அமைத்தல். | 22,000 |
| 27 | பீச் ஜஙசனில் கழிவுநீர் ஓடையில் 7” பிவிசி லைன் அமைத்தல் | 33,523 |
| 28 | இந்திரா காலனியில் ஆடு, மாடு அடிக்கும் கொட்டகை சரி செய்தல். | 16,000 |

| | | |
|---|---|---|
| 29 | குளச்சல் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு மற்றும் நகர்மன்றக் கூடத்தில் உள்ள கழிப்பறை சரி செய்தல். | 1,00,000 |
| 30 | ஆழ்துளை கிணற்றில் குடிநீர் வெளியேற்றும் குழாயில் ஏற்பட்ட பழுதினை சரிபார்த்தல். | 85,000 |
| 31 | குளச்சல் நகராட்சியில் விடுபட்ட ஏரியாக்களில் புதிய பைப் லைன் மற்றும் வால்வு பிட் அமைத்தல். | 95,000 |
| 32 | துறைமுகத்தெருவில் அமைந்துள்ள கழிப்பிடம் 1, 4 மற்றும் 5–ல் பழுதுகளை சரி செய்தல். | 80,000 |
| 33 | டாக்டர் அம்பேத்கார் தினசரி சந்தையில் காய்கறி விற்பனைக் கூடம் அமைத்தல். | 1,75,000 |
| 34 | குடிநீர் விநியோகக் குழாயில் ஏற்பட்ட பழுதுகளை சரி செய்தல் | 74,000 |
| 35 | பழுதுபட்ட சுவிஸ் வால்வுகளை மாற்றி புதிதாக வால்வு மற்றும் ஏர் வால்வு அமைத்தல். | 90,000 |
| 36 | ஏசுதாஸ் காலனி முதல் சைமன்காலனி பாலம் வரை Hitachi மற்றும் tipper உதவியுடன் ஏவிஎம் சானலில் தூர் வாருதல். | 30,000 |
| 37 | நரிக்கல் ரோடு முதல் பழைய மார்க்கெட் வரை கழிவுநீர் வடிகால் ஓடை அமைத்தல். | 4,80,000 |
| 38 | பம்பு ரூமிலுள்ள மெயின் சுவிச்சை மாற்றுதல் மற்றும் குடிநீர் குழாய் மாற்றியமைத்தல். | 11,000 |
| 39 | போர்ட் ஆபீசின் பக்கம் வால்வுபிட் மற்றும் Outlet பைப் சீரமைத்தல். | 45,000 |
| 40 | களிமார் பகுதியில் 2” ஜி.ஐ. பைப் லைன் மாற்றுதல் | 28,000 |
| 41 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட தண்ணீர் வினியோகக் குழாய் மோட்டாரில் பழுதுகளை சரி செய்தல். | 62,000 |
| 42 | குடிநீர் விநியோகக் குழாயில் புதிதாக மோட்டார் அமைத்தல் | 2,40,000 |
| 43 | கள்ளிடைப்பு மற்றும் பண்டாரவிளையில் அடிபம்பு அமைத்தல் | 9,000 |
| 44 | போர்வெல் எண்.2 மற்றும் டாங்கர் லாரியில் பழுதுபட்ட பைப்புகளை மாற்றுதல். | 13,000 |
| 45 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட விடுபட்ட ஏரியாக்களில் புதிய பைப் லைன் மற்றும் புதிய வால்வு தொட்டிகள் அமைத்தல். | 95,000 |
| 46 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட கே.எஸ்.எஸ்.எஸ்.காலனியில் குடிநீர் விநியோகக் குழாய் நீட்டித்தல் | 15,000 |
| 47 | மாதாகாலனி மற்றும் கொட்டில்பாட்டில் குடிநீர் வினியோகக் குழாய் சரி செய்தல். | 13,000 |
| 48 | மரமடி 2 சத்துணவு மையம் மற்றும் தெற்கு கள்ளியடைப்பு ஆகிய பகுதிகளில் குடிநீர் குழாய் அமைத்தல். | 5,000 |
| 49 | மாதாகாலனி கழிப்பறை மற்றும் கொட்டில்பாடு கழிப்பறைகளில் பைப் லைனில் ஏற்பட்ட பழுதுகளை சீரமைத்து புதிய பைப் லைன் மாற்றுதல். | 24,000 |
| 50 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட மாதாகாலனி மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியில் புதிய பம்பிங மெயின் வால்வு அமைத்தல். | 5,40,000 |
| 51 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட குடிநீர் விநியோக மோட்டாரில் பழுதுகளை சரி செய்தல். | 47.000 |
| 52 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட குடிநீர்வினியோக குழாய்களில் ஏற்பட்ட உடைவுகளை சரி செய்தல். | 85,000 |
| 53 | பேருந்து நிலையத்தின் பக்கத்தில் டிம்போ நிறுத்தும் செ.ட் அமைத்தல் | 2,60,000 |
| 54 | பேருந்து நிலைய வணிக வளாகத்தின் மாடிப்படி அடியில் கூடுதலாக கடை கட்டுதல். | 32,000 |

| | | |
|---|---|---|
| 55 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட குடிநீர் விநியோகிக்கும் மோட்டாரில் ஏற்பட்ட பழுதினை மாற்றுதல். | 47,000 |
| 56 | வெள்ளியாகுளம், ஆசாத்நகர், துறைமுகத்தெரு ஆகிய இடஙகளில் குடிநீர் வினியோகக் குழாய் நீட்டித்தல். | 58,000 |
| 57 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட குடிநீர் வினியோக மோட்டார் மற்றும் ஆழ்குழாய் கிணற்றில் பொருத்தப்பட்டுள்ள பைப்பை பழுது பார்த்தல். | 92,000 |
| 58 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெரு கதவு எண்.77/26 அருகாமையில் கழிவுநீர் வடிகால் ஓடை மற்றும் சிமின்ட் தளம் அமைத்தல். | 25,000 |
| 59 | கல்லத்திவிளையில் சிறுபாலம் மற்றும் சிமென்ட் காஙகிரீட் தளம் அமைத்தல். | 1,20,000 |
| 60 | சன்னதித்தெருவில் கழிவுநீர் வடிகால் ஓடை மற்றும் சிமென்ட் தளம் அமைத்தல். | 2,95,000 |
| 61 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட குடிநீர் விநியோகக் குழாய்களை பழுது பார்த்தல். | 42,000 |
| 62 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட ஆழ்குழாய் கிணறு எண். 1 மற்றும் 9 ஆகியவற்றிலுள்ள ஜி.ஐ. பைப்பை பிவிசி பைப்பாக மாற்றுதல். | 29,000 |
| 63 | காமராஜர் பேருந்து நிலையத்தின் முன்புறம் அமைந்துள்ள காஙகிரீட் தூண்களில் ஏற்பட்ட உடைவுகளை மாற்றுதல். | 15,000 |
| 64 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட குடிநீர்வினியோக குழாய்களில் ஏற்பட்ட உடைவுகளை சரி செய்தல். | 18,000 |
| 65 | ஈழக்காணிவிளை மற்றும் துறைமுகத்தெருவில் குடிநீர்வினியோக குழாய் நீட்டித்தல் மற்றும் வால்வு தொட்டிகள் அமைத்தல். | 1,60,000 |
| 66 | கொட்டில்பாடு பகுதியிலுள்ள வால்வு பக்கம். பீச் கதவு எண்.16/4 இவைகளின் பக்கத்தில் குடிநீர் விநியோகக் குழாயில் ஏற்பட்ட பழுதினை மாற்றுதல். | 4,900 |
| 67 | ஆழ்துளை கிணறு எண்.2 –ல் அமைந்துள்ள 50 mm dia பைப்பின் உடைவை மாற்றி சரி செய்தல். | 3,00,000 |
| 68 | பர்னட்டிவிளை டாஙக் பக்கமுள்ள ஆழ்துளை கிணறு எண்.2 மற்றும் பீச் கதவு எண். 12/11.சி. அமைந்துள்ள குடிநீர் விநியோகக் குழாய்களின் உடைவுகளை மாற்றுதல். | 3,300 |
| 69 | குளச்சல் கடை தெருவில் அமைந்துள்ள திரு.ராஜன், வழக்கறிஞர் வீட்டுபக்கம் உள்ள 160 mm PVC பைப்பை மாற்றி அமைத்தல். | 3,500 |
| 70 | CMC No.1, பள்ளிரோடு எண்.2 மற்றும் ஆசாரிமார் தெரு, பள்ளிவிளாகம், சிஙகாரவேலன் காலனி ஆகியவற்றில் உள்ள பிவிசி குடிநீர் விநியோகக் குழாயின் உடைவுகளை மாற்றுதல் | 3,800 |
| 71 | ஏசுதாஸ் காலனியில் பீச் பகுதிக்கு குடிநீர் விநியோகிக்கும் பம்பிங மெயினில் உள்ள 110 mm pvc பைப் உடைவுகளை மாற்றி சரி செய்தல் | 1,900 |
| 72 | காந்தி ஜஙசனில் 110 mm pvc குடிநீர் விநியோகக் குழாயில் ஏற்பட்ட உடைவுகளை சரி செய்தல். | 2,200 |
| 73 | KSSS காலனி, விவேகானந்தா ரோடு, விருந்தினர் மாளிகை ஜஙசன் இவற்றின் அருகில் குடிநீர் வினியோகக் குழாயில் ஏற்பட்ட உடைவுகளை சரி செய்தல். | 3,600 |
| 74 | சிஙகாரவேலன் காலனியில் 63 mm pvc பைப், பீச் கதவு எண்.16/1.எ. 9/54.எ. அருகில் 90mm pvc பைப் இவற்றில் ஏற்பட்ட உடைவுகளை சரி செய்தல். | 3,900 |

| | | |
|---|---|---|
| 75 | சீம்பிளிவிளை ஜெபக்கூடம், இலப்பவிளை இவற்றின் அருகாமையில் உள்ள 140mm 63 mm, 90 mm – குடிநீர் விநியோகக் குழாய்களில் ஏற்பட்ட உடைவுகளை சரி செய்தல். | 5,000 |
| 76 | காமராஜ் பேருந்து நிலையத்தை பழுது பார்த்தல் | 4,50,000 |
| 77 | ஆழ்துளை கிணறு எண்.15 –லுள்ள G.I. Pipe ஐ பிவிசி பைப்பாக மாற்றுதல். | 16,000 |
| 78 | குளச்சல் நகராட்சி அலுவலகத்திலுள்ள Computer Room பழுது பார்த்து A.C. பொருத்துதல். | 1,00,000 |
| 79 | டாக்டர் அம்பேத்கார் தினசரிச் சந்தையிலுள்ள வணிக வளாகத்தில் கேட் மற்றும் கழிப்பிட வசதி செய்தல். | 1,45,000 |
| 80 | துறைமுகத்தெரு கழிப்பிட எண். 1 , 2 இவற்றை சுற்றி மதில் சுவர் மற்றும் செப்டிக் டாங்க் அமைத்தல் மற்றும் பழுதுபட்ட கட்டிடத்தை இடித்து மாற்றுதல். | 1,80,000 |
| 81 | கலைஞர் கருணாநிதி வணிக வளாகத்தில் அமைந்துள்ள BSNL ஆபீசில் கூடுதல் வசதிகள் செய்தல். | 3,00,000 |
| 82 | ஆழ்துளை கிணறு நம்பர் 10 HP சப்மெர்சிபுள் பம்புசெட் அமைத்தல் | 14,800 |
| 83 | விகேபி Panel Bpard மாற்றி 10 HP Sub mercible Panel Bpard -.ஆக மாற்றுதல். | 18,000 |
| 84 | ஆழ்துளை கிணறு எண்.2–ல் அமைந்துள்ள Panel Bpard மாற்றி 10 HP Sub mercible Panel Bpard -.ஆக மாற்றுதல். | 12,800 |
| 85 | பாலத்தன்கரையில் உள்ள சம்பில் 12.5 HP Sub mercible மோட்டாரை சரிபார்த்தல். | 16,000 |
| 86 | டெம்போ நிறுத்துமிடத்தில் கூடுதலாக truss work, I.Beam அமைத்தல் | 1,00,000 |
| 87 | KSSS சுனாமி காலனியில் Under ground sewerage sullage water அகற்றுதல். | 36,000 |
| 88 | தினசரிச்சந்தையில் புதிதாக பைப் லைன் அமைத்தல் | 36,000 |
| 89 | குளச்சல் நகராட்சி அலுவலகத்திற்கு தேவையான Xerox machine | 80.000 |
| 90 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட குடிநீர் விநியோக மோட்டாரில் ஏற்பட்ட பழுதினை மாற்றுதல் | 37,000 |
| 91 | குளச்சல் பேருந்து நிலைய முன்புறமுள்ள பழைய கழிவு நீரோடையை சரிபார்த்தல். | 50,000 |
| 92 | சிங்கன்காவு காலனியில் உள்ள உபயோகமற்ற திறந்தவெளி கிணற்றை மண் கொண்டு நிரப்புதவ். | 21,000 |
| 93 | குளச்சல் பேருந்து நிலைய முன்புறம் கல்வெர்ட் அமைத்தல். | 1,40,000 |
| 94 | துறைமுகத்தெரு 3, 4, 5 மற்றும் காவடிவிளையில் பழுதடைந்த கழிப்பறைகளை சரி செய்தல். | 7,000 |

45) **கடன்கள்**

46) அறிக்கையாண்டில் கடன் ஆரம்ப இருப்பு – ரூ. 2,55,61,740/–
அரசிடமிருந்து பெறப்பட்ட கடன் – –
திரும்ப செலுத்தப்பட்ட கடன் – ரூ 4,49,300/–
செலுத்தப்பட்ட வட்டி – ரூ. 2,76,201/–
––––––––––––––––
, – ரூ. 2,51,12,440/–
––––––––––––––––

**46. முதலீடுகள்**

நகராட்சி முதலீட்டு கணக்கில் இருப்பு ரூ. 3,90,100/–

**தணிக்கை**

தணிக்கை ஆண்டில் 1333 தணிக்கைத் தடைகள் இருந்தது. 26 தணிக்கைத் தடைகள் முடிவு செய்யப்பட்டது. அறிக்கை ஆண்டு முடிவில் 1307 தணிக்கைத் தடைகள் நிலுவையாக உள்ளன.

**47) சொத்து**

அறிக்கை ஆண்டில் நகராட்சியின் சொத்து மதிப்பு – ரூ. 9,33,53,258/–

கடந்த ஆண்டுகளில் அரசிடமிருந்து கடன் ஏதும் பெறப்படவில்லை. ஏற்கனவே செலுத்தப்பட வேண்டிய கடன் தொகை மட்டும் வட்டி சேர்த்து செலுத்தப்பட வேண்டியுள்ளது.

**பொது குறிப்பு**

அறிக்கை ஆண்டில் இந்நகராட்சி நிர்வாகம் நல்லமுறையில் செயல்பட முழு ஒத்துழைப்பு நல்கிய அனைத்துப் பணியாளர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆணையர்
குளச்சல் நகராட்சி